# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.
தொலைபேசி: 044–22201337
மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in

******

**தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032**
**முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)**

**முறையீட்டு மனு எண்.742/2016/பே.2**
**ஆணை நாள் 12 –12–2018**

**1.திரு முத்துப்பாண்டி,**
**82/1, வடக்குத் தெரு,**
**ப.கொந்தகை,**
**நாகப்பட்டினம் மாவட்டம்.**
**2.திரு. நசீர் முகமது,**
**7, புதுமனைத் தெரு,**
**திட்டச்சேரி,**
**நாகப்பட்டினம் மாவட்டம்.** --- **முறையீட்டு மனுதாரர்கள்.**

**திரு. ரவிச்சந்திரன்,**
**முன்னாள் தலைவர்,**
**திட்டச்சேரி பேரூராட்சி,**
**நாகப்பட்டினம் மாவட்டம்.** -- **எதிர் மனுதாரர்.**

**ஆணை.**

திரு. முத்துப்பாண்டி, மற்றும் திரு. நசீர் முகமது என்கிற இரு முறையீட்டு மனுதாரர்களின் முறையே 20.07.2015 மற்றும் 27.07.2015ம் நாளிட்ட முறையீட்டு மனுக்கள், பேரூராட்சிகளின் இயக்குநர், சென்னை அவர்களின் கடித ந.க.எண்.10687/2015/இ.2/நாள் 14.07.2016ன் கடிதம் மூலம் இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு, முறையீட்டு மனு எண்.742/2016 என எண்ணிடப்பட்டது. மேற்படி முறையீட்டு மனுக்கள் மீதான அறிக்கைகள் பெறப்பட்டும், விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டும் பரிசீலிக்கப்பட்டு கீழ்க்காணும் ஆணை வெளியிடப்படுகிறது.

முறையீட்டு மனுதாரர்கள் தங்களுடைய முறையீட்டு மனுக்களில், நாகப்பட்டினம் மாவட்டம், திட்டச்சேரி பேரூராட்சிக்குட்பட்ட மரக்கான்சாவடியில் இயங்கி வரும் நிறுவனமான ஆர்.டி.எஸ்.ரெடிமிக்ஸ் என்ற நிறுவனம், முன்னாள் பேரூராட்சித் தலைவர் திரு.கோ.ரவிச்சந்திரன் என்பவரது பினாமி நிறுவனம் என்றும், வருமான வரி முறையாக செலுத்தாமல் இயங்கி வருவதாகவும், இதன் பொருட்டு அரசுக்கு பல கோடி ரூபாய் இழப்பீடு ஏற்படுவதாக தெரிவித்து புகார் தெரிவிக்கப்பட்டுள்ளது.

28.07.2016 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனுவினை, 2015–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவ (மனு தாக்கல் வழிமுறை, விசாரணை மற்றும் இறுதி செய்தல்) விதிகள், விதி. 6–ல் கண்டுள்ளவாறு நீதிமன்ற வில்லைக்கட்டணம் ரூ.10/– ஒட்டப்பட்டும், விதி–4–ன்படி படிவம்–1ல் பூர்த்தி செய்தும் தங்களது முறையீட்டு மனுவினை சமர்ப்பிக்கத் தெரிவித்து மனுதாரர்களுக்கு ஆணையிடப்பட்டது. திரு.முத்துப்பாண்டி, முறையீட்டு மனுதாரது கடிதம், மேற்படி முகவரியில் இது போன்று யாரும் இல்லை என அஞ்சல் துறையின் மூலம் திரும்ப வரப்பெற்றுள்ளது. மற்றொரு முறையீட்டு மனுதாரரான திரு.நசீர் என்பவரிடமிருந்து விதிகளின்படி உரிய முறையில் முறையீட்டு மனு அறிவிப்பிற்கு பின்னரும் இம்முறைமன்ற நடுவத்தில் தாக்கல் செய்யப்படவில்லை.

இம்முறைமன்ற நடுவ 07.12.2016 நாளிட்ட அழைப்பாணை மூலம் மேற்படி முறையீட்டு மனு தொடர்பாக தனது விளக்கத்தினை இம்முறைமன்ற நடுவத்தில் பதிவு செய்ய 25.01.2017ல் இம்முறைமன்ற நடுவத்தில் ஆஜராகத் தெரிவித்து திரு.முகமது நசீர், முறையீட்டு மனுதாரருக்கு ஆணையிடப்பட்டது. ஆனால், மேற்படி விசாரணைக்கு முறையீட்டு மனுதாரர் திரு.முகமது நசீர், ஆஜராகவில்லை.

07.12.2016 நாளிட்ட இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணையில் மேற்படி முறையீட்டு மனு தொடர்பான விளக்க அறிக்கையினை சமர்ப்பிக்கத் தெரிவித்து நாகப்பட்டினம் மாவட்டம், திட்டச்சேரி பேரூராட்சி செயல் அலுவலருக்கு ஆணையிடப்பட்டது.

திட்டச்சேரி பேரூராட்சி செயல் அலுவலர், தனது 10.01.2017 நாளிட்ட அறிக்கையில் மேற்படி முறையீட்டு மனு தொடபான தனது வாதுரையில் முறையீட்டு மனுதாரர் திரு.முத்துப்பாண்டி என்ற எவரும் திட்டச்சேரி பேரூராட்சி பகுதியில் வசிக்கவில்லை எனவும் மேற்படி மனு போலியனது எனவும் தெரிவித்துள்ளதுடன், மேற்படி முறையீட்டு மனுதாரர் இப்பகுதியில் தெரிவித்துள்ள முகவரியில் வசிக்கவில்லை என்பதற்கான திட்டச்சேரி கிராம நிர்வாக அலுவலரின் சான்றினையும் சமர்ப்பித்துள்ளார். மேலும் மற்றொரு முறையீட்டு மனுதாரரான திரு. முகமது நசீர் என்பவர் தெரிவித்துள்ள புகார்களை மறுப்பதாக குறிப்பிட்டு இது சம்பந்தமாக திட்டச்சேரி பேரூராட்சி முன்னாள் தலைவரிடமிருந்து பெறப்பட்ட விளக்கங்களையும் சமர்ப்பித்துள்ளார். மேற்படி விளக்கங்களில் முறையீட்டு மனுவில் தெரிவித்துள்ள ஆர்.டி.எஸ் ரெடிமிக்ஸ நிறுவனத்திற்கும் தனக்கும் எந்தவிதத்திலும் சம்பந்தம் இல்லை எனத் தெரிவித்துள்ளதோடு மேற்படி திரு.முகமது நசீர், முறையீட்டு மனுதாரர் தெரிவித்துள்ள முகவரியில் எவரும் வசிக்கவில்லை என்பதற்கான திட்டச்சேரி கிராம நிர்வாக அலுவலரின் 10.01.2017 நாளிட்ட சான்றினையும் பெற்று சமர்ப்பித்துள்ளார்.

எனவே மேற்கண்ட விளக்கங்களின் அடிப்படையில் பெறப்பட்ட இரு முறையீட்டு மனுக்களும் ஆதாரமற்றவை எனக் கருதி தள்ளுபடி செய்வதுடன் தொடர் நடவடிக்கைகள் கைவிடப்படுவதென முடிவெடுத்து அவ்வாறே ஆணையிடப்படுகிறது. மேலும் இப்பொருள் தொடர்பாக செயல் அலுவலர் மற்றும் தஞ்சாவூர் மண்டல பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் ஆகியோர்களுக்கு நிர்ணயிக்கப்பட்டிருந்த 24.12.2018 நாளைய விசாரணையும் ரத்து செய்து ஆணையிடப்படுகிறது.

2018ம் ஆண்டு டிசம்பர் திங்கள் 12 –ஆம் நாள் என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையுடன் இவ்வாணையிடப்படுகிறது.

–//ஒப்பம்//–

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

–//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//–

செயலாளருக்காக

பெறுநர்

1.செயல் அலுவலர்,
திட்டச்சேரி பேரூராட்சி,
நாகப்பட்டினம் மாவட்டம் –609 703.

2.பேரூராட்சிகளின் உதவி இயக்குநர்,
தஞ்சாவூர் மண்டலம்,
மாவட்ட ஆட்சியர் அலுவலகம்,
தஞ்சாவூர்.

3.பேரூராட்சிகளின் இயக்குநர்,
பேரூராட்சிகளின் இயக்குநரகம்,
குறளகம், சென்னை –108.